பக்கங்கள் 25

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 20 திங்கட்கிழமை 06.10.2025 | அதிர்வு 66

## இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வாக்கெடுப்பின்றி இன்று நிறைவேறும்

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான புதிய பிரேரணையின் இறுதி 07▶

# சர்வதேச நீதி வேண்டி போராடி வரும் தமிழருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்



## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் சிறீதரன் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், தமிழினப் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் – சர்வதேச நீதியை எதிர்பார்க்கும் தமிழ் சிவில் சமூகத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் 07▶

# பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் அநுரவின் அரசாங்கம்

## சஜித் அணி கடும் விசனம்

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆட்சியேறியவர்கள் இன்று, புதிய அரசமைப்பை உருவாக்குவதாகக் கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குப் பதிலாக அதனை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே தற்போது அரசு முன்னெடுத்து வருகின்றது. இந்த அரசு பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றிவருகின்றதுஎன்பதுவெளிப்படையாகத் தெரிகின்றது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில், 08▶



# மக்களுடனான என் இதயபூர்வமான பிணைப்பை உடைக்க முயன்றால் அது மேலும் வலுவடையும்!

## அநுர அரசுக்கு மஹிந்த மறைமுக எச்சரிக்கை

நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையை அடிப்படையாகக் கொண்ட மக்களின் அன்பு இலாப நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் வலைத்தளத்தில், தமது வாழ்நாளின் பெரும் பகுதியை மக்களிடையே கழித்ததால், மக்களின் அன்பை நன்கு அறிந்திருப்பதாக அவர் பதிவேற்றம் செய்துள்ளார்.

இதன் காரணமாக, அதன் மதிப்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மேலும் அதிகமாகி உள்ளது எனவும், இது ஓர் அரசியல் உறவு மட்டுமல்ல, கடினமான ஓர் இதயபூர்வமான பிணைப்பு என்றும் அந்தப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார். 08▶






யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் நாளை 7ஆம் திகதி நீதிமன்ற மற்றும் காணப் பதிவக நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்து, நாளை காலையில் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் கூடி எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றில் ஈடுபட இருக்கின்றது என்று செய்தி வெளியாகியுள்ளது.

சட்டத்தரணி ஒருவரின் இல்லம் மற்றும் அலுவலக வளாகத்துக்குள் பொலிஸார் சட்டவிரோதமாக நுழைந்து சோதனை நடத்தினர் என்று குறிப்பிட்டு, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் முன்னெடுக்க இருப்பதாகக் கூறப்படுகின்றது. 08▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிரணிகள் கூட்டு அரசியல் சமர்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தலை விரைவில் பெறுவதற்குரிய எதிரணிகளின் கூட்டு அரசியல் சமர் உக்கிரமாக முன்னெடுக் கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாகவே மாகாண சபைத் தேர்தல் முறைமை கொண்டுவரப்பட் டது. உயிர்த் தியாகங்களுக்கு மத்தியி லேயே இந்த முறைமை கொண்டுவரப் பட்டது. எனவே, மாகாண சபை முறைமை அவசியம்.

மாகாண சபைத் தேர்தல் பற்றி எதி ரணிகள் கதைக்கின்றனவா எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. இது பற்றி நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின் றோம். மாகாண சபைகளின் கீழ் நிறைய பாடசாலைகள், வைத்தியசாலை கள் உள்ளன. அந்த முறைமையில் ஜனாதிபதியின் எதேச்சதிகாரம் இருப்பதை அனுமதிக்க முடியாது. ஆகவே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை வெகு விரைவில் வென்றெடுப்பதற்கு நாம் ஒன்றிணைய வேண்டும். இதற்காக ஜனநாயக வழியில் எல்லாவித நட வடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்." – என்றார்.

# தமிழரசின் பிரேரணையை ஏற்றால் விரைவில் மாகாண சபைத் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி அறிவிப்பு




மாகாண சபைகள் தேர்தலை நடத்து வதற்கு நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணைகளை ஏற்றால் விரைவில் தேர்தலை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் தொடர் பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார் என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த அதிகாரி மேலும் குறிப்பிடுகை யில்,

"மாகாண சபைகள் தேர்தலை நடத்து வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு எப்போதும் தயாராகவே இருக்கின்றது. எனினும், நாடாளுமன்றம் அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டியுள்ளது.

புதிய தேர்தல் முறைமை என்பது, உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் போன்று தொகுதி, விகிதாசார முறைமையிலான கலப்பு தேர்தல் முறையாக இருக்கும். எனினும், அந்தத் தேர்தல் முறைமைக்கு எல்லை நிர்ணயம் செய்வதே தடையாக இருக்கின்றது.

புதிய தேர்தல் முறைமைக்கு எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட போதிலும் அது நல்லாட்சி அரசின் காலத்தில் நிராகரிக் கப்பட்டது. பின்னர், அது மீளாய்வு செய்யப்பட்ட போதிலும் மீண்டும் நிராகரிக் கப்பட்டமையால் புதிய தேர்தல் முறைமை இதுவரை சாத்தியமற்ற ஒன்றாக இருக் கின்றது.

எனவே, அரசு புதிய தேர்தல் முறை மையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்த முற்பட்டால் அதற்கு நீண்ட காலம் செல்லும். அவ்வாறு இல்லாது, தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமாயின், பழைய எல்லை நிர்ணயத்தை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இல்லையெனில், நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ், மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த முடியும்.

இதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்கள் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணைகளை ஏற்றுக்கொண்டால், மாகாண சபைகள் தேர்தலை நாளை யேனும் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது." – என்றார்.

# பொலிஸ் ஆணைக்குழு அரசின் கட்டுப்பாட்டுக்குள்

## சுயாதீனத்தன்மை இழப்பு என்று எதிரணி விசனம்



"அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்று முழுமையான அரசியல் தலையீட்டினால் பொலிஸ் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தன்மையை இழந்துள்ளது. ஜே.வி.பி. செயற்பாட்டாளரான பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தீர்மானத்துக்கமையவே பொலிஸ்மா அதிபர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விசனம் வெளியிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வெவ்வேறு காரணிகள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றம், நியமனங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

அரசமைப்பின் ஊடாக தமக்காக உறுதிப்படுத்தப்பட்ட சுயாதீனத்தன்மையை பொலிஸ் ஆணைக்குழு கைவிட்டுள்ளது. அரசின் அழுத்தத்தின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எதற்காக இவற்றை அனுமதிக்கின்றார்? தற்போது சகல அதிகாரங்களும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டு 17ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்டதைப் போன்று பொலிஸ் ஆணைக்குழு முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தேவைக்கேற்பவே பொலிஸ்மா அதிபர் செயற்படுகின்றார். தற்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நாளுக்கு நாள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். பொறுத்தமற்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். விரைவில் இது தொடர்பில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் நடவடிக்கை எடுப்போம். சேவையில் இருந்த போது காயமடைந்த சுமார் 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் இருக்கின்றனர்.

அவர்களுக்கு இலகுவாகப் பொறுப்புக்களை மாத்திரமே நிறைவேற்ற முடியும். ஆனால், அவர்களுக்கு மிகவும் கடினமாக பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீண்ட நேரம் நிற்க முடியாதவர்கள் போக்குவரத்து பிரிவில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். எனவே, இவர்கள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் சிந்தித்துச் செயற்படுமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.

# பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் யால சரணாலயத்தில் விசேட சோதனை










கதிர்காமம், வெஹெரகல நீர்த்தேக்கத்தை அண்மித்த யால சரணாலயத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் விசேட சோதனைகளை முன்னெடுத்துள்ளனர்.

அண்மையில் வெஹெரலகல வாவியிலிருந்து மெகசின் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டதையடுத்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைவாக குறித்த விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெஹெரகல்ல வாவியிலிருந்து 215 ரி -56 ரக வெற்று மெகசின்கள், 38 எல்.எம்.ஜி. ட்ரம் வெற்று மெகசின்கள், 06 ரி -81 மெகசின்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி ஆயுதங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.




# ஒரு கட்சி ஆட்சி முறைமைக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்

## மொட்டுக் கட்சி திட்டவட்டம்

“நிறைவேற்று அதிகாரத்துடன் நாடாளுமன்றத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகின்றது. ஆனாலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவை போதாது எனக் கூறுகின்றார். இதன் ஊடாக மறைமுகமாக ஒரு கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“தற்போது மாகாண சபைகளின் அதிகாரம் முற்றுமுழுதாக அதிகாரிகள் வசமாகியுள்ளது. அவர்கள் அரசின் பிரதிநிதிகளாகவுள்ளனர். மறுபுறம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் காணப்படுகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக நிறைவேற்று அதிகாரமும் காணப்படுகின்றது. ஆனால், இவ்வாறு அதி உச்ச அதிகாரங்களைத் தம்வசம் வைத்துக் கொண்டும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவை போதாது என ஜனாதிபதி கூறுகின்றார்.

எனவே, தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனிக் கட்சி ஆட்சி முறைமை வேண்டும் என்கின்றனர்.

தற்போது தாஜுதீன் கொலை விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களை இதனுடன் தொடர்புபடுத்தியவர்கள், இன்று அதை வேறு திசைக்குக் கொண்டு சென்றுள்ளனர். உண்மையில் இவை எதிர்க்கட்சிகளைப் பலவீனப்படுத்துவதற்காகக் கூறப்படும் கதைகளாகும்.

போதைப்பொருள் ஒழிப்புத் திட்டங்கள் எனக் கூறிக் கொண்டு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பிரதானி பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பல கிலோ கிராம் போதைப் பொருட்களைக் கைப்பற்றி அழிப்பதாகக் கூறினாலும், எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சமூகத்தில் போதைப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

போதைப்பொருள் பிரசாரம் தோல்வியடைந்துள்ளதால், தாஜுதீன் கொலையைப் பேசுபொருளாக்கியிருக்கின்றனர். அரசின் இயலாமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்தை அழித்து ஒரு கட்சி ஆட்சி முறைமைக்கு ஒருபோதும் இடமளியோம்.”

– என்றார்.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜீப் ரக வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது

சட்டவிரோதமாக இறக்குமதி செய்து, போலி தகவல்களைப் பயன்படுத்தி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஜீப் ரக வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடவத்தை பகுதியில் மத்திய குற்ற விசாரணை பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது இந்த வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள மேலும் 20 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹிட்லரின் பாதையில் அநுரவின் அரசாங்கம்

## ரணில் கடும் குற்றச்சாட்டு



எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பு மற்றும் அவற்றின் ஒன்றிணைவு குறித்து அச்சம் கொண்டுள்ள அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு, ஒரு ஹிட்லர் போக்கிலான செயற்பாட்டை வெளிப்படுத்துகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க கடுமையாகச் சாடியுள்ளார்.

எதிரணியினருடன் அரசியல் ரீதியான எந்தப் பிரச்சினைகளாக இருந்தாலும், உள்ளூர் அரசியல் மேடைகளில் கருத்துத் தெரிவித்திருக்க வேண்டும் என்றும், வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை குறித்தும் இங்குள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் விமர்சனங்களை முன்வைப்பது முறையற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, தேசிய மக்கள் சக்தி அரசின் தற்போதைய செயற்பாடுகளுக்கு வரலாற்று உதாரணங்களைக் கொண்டு பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"1933 ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தபோது, அவருக்கு 50 வீதத்துக்கும் அதிகமான ஆதரவு இருக்கவில்லை. ஹிட்லரின் கட்சி வெறும் 44 வீதமான வாக்குகளையே பெற்றது. எனவே, தனது அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே ஹிட்லர் அன்று எதிர்க்கட்சிகளை அழித்தார்.

கட்சிகளை மாத்திரமல்லாமல் எதிர்க்கட்சி அலுவலகங்களையும் இல்லாதொழித்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், செக்கோஸ்லோவியா மற்றும் ஹங்கேரியைக் கைப்பற்ற வேண்டிய தேவை கம்யூனிஸ்ட்களுக்கு இருந்தது. அங்கு சோவியத் படை மிக வலுவாக வேரூன்றி இருந்தது. இருப்பினும் செக்கோஸ்லோவியா நிறுவனரின் புதல்வர் வெளியுறவு அமைச்சகக் கட்டடத்தில் நான்காவது மாடி ஜன்னலில் இருந்து தூக்கி எறியப்பட்டார். இந்த விடயம் அன்றைய எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவில் விவாதிக்கப்பட்டது.

ஜனாதிபதியும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசும் இலங்கையில் தற்போது செய்வது என்ன? ஜனாதிபதி அநுரவுக்கு வெறும் 44 வீதமான வாக்குகளே உள்ளன. மக்கள் மத்தியில் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு தற்போது அதிகரித்து வருகின்றது. அதனைத் தடுக்கவே அவர் கைது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் மற்றொரு முயற்சி நீதித்துறையை அடிபணியச் செய்வதாகும். குறைந்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஹிட்லர் தனது அதிகாரத்தைத் தக்கவைக்க எதிர்க்கட்சிகளை ஒழித்தது போலவே, தேசிய மக்கள் சக்தியும் அதே வழியில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குகின்றது. நீதித்துறையைக் கட்டுப்படுத்தவும் இந்த அரசு முயல்கின்றது." – என்றார்.

# நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாக வழிநடத்துகின்ற அரசாங்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி கடும் விசனம்

"நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாக வழிநடத்துவதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. 16 வயது பூர்த்தியான சிறுவர்கள் பாலியல் உறவில் ஈடுபட சுதந்திரம் வழங்கினால், அந்த வயதிலுள்ள சிறுமியொருவர் கர்ப்பமடைந்தால் அதற்கு சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க வழங்கும் பதில் என்ன?"

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாக வழிநடத்துவதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க 16 வயது பூர்த்தியடைந்த சிறுவர்களுக்கு பாலியல் உறவில் ஈடுபட முடியும் என நாடாளுமன்றத்தில் கூறுகின்றார்.

இந்நாட்டில் சிகரட் கொள்வனவு செய்வதற்கு 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது சட்டமாகும். இவ்வாறான நாட்டில் 16 வயதுடையோருக்கு இதுபோன்ற சுதந்திரம் வழங்



கப்பட்டால் 2500 ஆண்டுகள் பழமையான பௌத்த தேரவாதத்தை பின்பற்றும் தாய்நாட்டின் ஒழுக்கத்துக்கு என்னவாகும்?

பௌத்தம் மாத்திரமின்றி ஏனைய அனைத்து மதங்களும் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஒழுக்கத்தை சீரழிக்கும் வகையிலேயே சபை முதல்வரின் கருத்து அமைந்துள்ளது. 16 வயது சிறுமியொருவர் கர்ப்பம் தரித்தால் அந்த சிறுமிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க வழங்கும் பதில் என்ன? கடந்த வாரத்தில் இருவேறு பிரதேசங்களில் பிறந்த சிசுக்கள் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இவ்வாறான திருமணத்துக்கு முன்னதான பாலியல் உறவுகளால் எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சுமார் 20 வயதுடைய இளைஞர், யுவதிகள் மத்தியிலேயே இந்நோய் அதிகளவாகக் காணப்படுவதாகவும், அதிக நோயாளர்கள் அநுராதபுரம் மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாகவும் ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க தன்பாலீர்ப்பினரை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறை மேம்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருவதற்கும், தாய்லாந்து செல்வதற்குமான நோக்கங்கள் வேறாகும். அரசாங்கம் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் தான் இதனை அனுமதிக்கவில்லை எனக் கூறினாலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் இது குறித்த கடிதத்தை அனுப்பியவர்களுக்கு எதிராக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த கடிதம் இன்றுவரை மீளப் பெறப்படவும் இல்லை.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டில் கூட ட்ரம்ப் இதை அனுமதிக்க விரும்பாத போது, எம்மைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடு எவ்வாறு அதனை அங்கீகரிக்க முடியும்? இளைஞர்களின் வாக்குகளை நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. மகாசங்கத்தினரும், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் ஆழமாக சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்." – என்றார்.




# திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, தையிட்டி பகுதியில் அமைந்துள்ள, திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் நேற்று போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள போராட்டக்காரர்கள், அதனை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தையொட்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று ஆரம்பமான இந்தப் போராட்டம் இன்று மாலையுடன் நிறைவடையவுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பதாகைகளை ஏந்திக் கோஷமிட்டு, கைகளில் கறுப்புக் கொடிகளைத் தங்கியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்களுடன் இணைந்து ஒவ்வொரு பௌர்ணமி தினத்தையொட்டியும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் லஞ்சம் தொடர்பில் 4,500 முறைப்பாடுகள்

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், லஞ்சம் பெறுதல் சம்பவங்கள் தொடர்பாக, 4,500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த காலப்பகுதியில் 4,626 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, 85 தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில், பெரும்பாலானோர் பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச நீதி...

சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் 60ஆவது கூட்டத் தொடரின் பக்க அமர்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

”இலங்கை தொடர்பான முக்கிய குழு நாடுகள் இலங்கையை முறையான மனித உரிமைகள் பேரவை வழிமுறைகளை முன்மொழிய வலியுறுத்த வேண்டும்.

குறிப்பாக, பேரவையின் நிகழ்ச்சி நிரல் 4இன் கீழ் இலங்கைக்கான விசேட அறிக்கையாளரை நியமிக்க வேண்டும்.

முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கோரியபடி, இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

2008 டிசம்பர் முதல் 2009 மே மாதம் வரை இலங்கை அரசு இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்றதன் மூலம் ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்தது.

இந்த இனப்படுகொலைக்கு ஈழத் தமிழர்கள் சர்வதேச – பாரபட்சமற்ற – நீதியான விசாரணைகளைக் கோருகின்றனர். கடந்த 16 ஆண்டுகளாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் முறையிட்டு வருகின்றனர்.

ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும் நிலைமாறு கால நீதியை மேம்படுத்துவதையும் உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவாக தமிழ் சிவில் சமூகத்துக்கு முழு ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்க அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.நா. பொதுச் சபையின் 3ஆவது குழு உறுப்பினர்கள், இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும். இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு நிதி உதவி அளிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். இதன் இறுதி நாளில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளுக்குச் சர்வதேச நீதி கோரப்பட்டது.” – என்றார்.

### புதிய பிரேரணை...

வரைவில் ‘இனமோதல்’ என்ற சொற்பதம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை இன்று திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன், இந்தப் பிரேரணை இன்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் கடந்த மாதம் முதலாம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இதில், பிரிட்டன் தலைமையிலான கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ, வட மசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் ‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்’ என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதையடுத்து, இந்தப் பிரேரணை தொடர்பில் கடந்த மாத நடுப் பகுதியில் உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கை பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் தமது மாற்று அபிப்பிராயங்களை முன்வைத்திருந்தனர்.

இதன் பின்னணயில், இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை முதலாம் கட்ட மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, திருத்தங்களுடனான பிரேரணை கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டது.

அந்தப் பிரேரணையில் ‘இன மோதல்’ என்பதற்குப் பதில் ‘மோதல்’ என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டது. அத்துடன், சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய விசேட சட்டவாதியின் பங்கேற்புடனான பிரத்தியேக நீதித்துறை பொறிமுறை ஒன்றை நிறுவுவது குறித்து அரசு அவதானம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்த விடயம் முற்றாக நீக்கப்பட்டிருந்தது. எனினும், திருத்தப்பட்ட அந்தப் பிரேரணை பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான கோரிக்கையை நீர்த்துப் போகச்செய்யும் விதமாக அமைந்திருப்பதாகப் பல தரப்பினரும் விமர்சித்திருந்தனர்.

இதையடுத்து, இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் இறுதி வரைவில் ‘இன மோதல்” என்ற சொற்பதம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த விடயம், “இன மோதல்களின் விளைவாக இலங்கை முகங்கொடுத்த மிக மோசமான துன்பங்களை இலங்கை அரசு அங்கீகரித்தமையையும் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய இனவாத அரசியலுக்கு இடமளிக்காமல் இருப்பதற்கான அதன் கடப்பாட்டையும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதுடன், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வரவேற்கின்றோம்” என்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

இன்று சமர்ப்பிக்கப்படும் இந்தத் திருத்தப்பட்ட பிரேரணையின் உள்ளடக்கத்தை நிராகரித்து இலங்கை எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும் அதனை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பைக் கோராது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், புதிய பிரேரணை இன்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படலாம். நிறைவேற்றப்படும் தீர்மானத்துக்கு அமைய மனித உரிமைகள் பேரவைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் பேரவையின் 63 ஆவது கூட்டத் தொடரில் எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரகசியம் பரகசியம்...

இது பற்றி சற்று ஊடுருவி விசாரித்த போது, பழைய ஒரு சர்ச்சையின் தொடர் இது என்று தெரிய வந்தது.

ஏற்கனவே காணிப் பதிவு நடவடிக்கைகள் தொடர்பாக சில சட்டத்தரணிகள் முறைகேடாக நடந்து கொண்டனர் என்று குற்றச்சாட்டு அவர்களுக்கு எதிராக பரவலாக வெளியாகி இருந்தது. இது தொடர்பில் மூன்று சட்டத்தரணிகள் ஏற்கனவே பிணையில் உள்ளனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தச் சர்ச்சை தொடர்பில் சில சட்டத்தரணிகளைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்த போது, அது தொடர்பில் அப்போதைய சட்டமா அதிபரோடு யாழ்ப்பாண சட்டத்தரணிகளின் தூதுக் குழு ஒன்று நேரடியாக முன்னர் பேச்சு நடத்தியது எனவும் தகவல் கிட்டியது.

அந்தப் பேச்சுக்களை அடுத்து, சட்டத்தரணிகளுக்கு எதிரான இந்த முறைகேடுகள் தொடர்பான விவகாரத்தில் சட்டமா அதிபரின் முன் அனுமதி இன்றி சட்டத்தரணிகள் எவரையும் கைது செய்யக்கூடாது என்ற ஒரு சுற்றுநிருப உத்தரவை அப்போதைய சட்டமா அதிபர் பொலிஸ் தரப்பினருக்கு வழங்கினார் என்று ஒரு வட்டாரம் தெரிவித்தது.

அத்தோடு அந்த விவகாரம் அப்போது அடங்கியிருந்தது.

ஆனால் தற்போதைய சட்டமா அதிபர் இந்த விடயங்களை பரிசீலித்த பின்னர் அந்தச் சுற்று நிரூபத்தில் சில மாற்றங்கள் மற்றும் தளர்வுகளை செய்து இருக்கின்றமையை அடுத்து இவ் விடயத்தில் தமது புலனாய்வு தொடர் நடவடிக்கைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மீளத் துரிதமாக ஆரம்பித்திருக்கின்றனர் என்றும், அதனை அடுத்து கடந்த வார இறுதியில் சில சட்டத்தரணிகள் தமது நடமாட்டத்தைக் குறுக்கி, தலைமறைவு சூழ்நிலைக்குச் சென்றனர் என்றும் ஒரு பேச்சு அடிபட்டது.

இந்தப் பின்புலத்திலேயே இப்போது ஒரு சட்டத்தரணியின் அலுவலகம் மற்றும் வீடு பொலிஸாரின் சோதனைக்கு உள்ளானதான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அடுத்து வரும் நாள்களில் சில சட்டத்தரணிகளுக்கு நெருக்கடி இருக்கும் என்று நினைக்கிறேன்.

போர் அழிவு, மக்களின் காணி ஆவணங்கள், சாதனங்கள் அழிவுற்றமை, தொலைந்து போனமை, பலர் உயிரிழந்தோ, காணமலோ போனமை, இடம்பெயர்ந்தமை போன்ற நெருக்கடிகளின் பின்புலத்தில் காணி உறுதி விவகாரங்களில் பல குழப்பங்கள் ஏற்பட்டன என்பது பலருக்கும் தெரியும். இந்த நெருக்கடிகளை சாதகமாகப் பயன்படுத்தி 'புகுந்து விளையாடிய' சில நடவடிக்கைகள் இப்போது புலனாய்வுக்கு உள்ளாகி இருக்கின்றன. அவ்வளவுதான்.

* * *

இலங்கையில் தமிழர் தாயகத்தின் சகல மாவட்டங்களிலும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒரே தமிழ்க் கட்சி என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னைப் பறைசாற்றிக் கொண்டாலும் –

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனது பலத்தை தமிழரசுக் கட்சி மீண்டும் நிரூபித்துக் காட்டியது என்று தற்பெருமை பேசினாலும் –

அந்தக் கட்சிக்கு மன்னார் மாவட்டத்தில் ஓர் உள்ளூராட்சி சபை கூட அதிகாரம் செலுத்தக்கூடியதாகக் கிடைக்கவில்லை. அந்த மாவட்டத்தில் சகல உள்ளூராட்சி சபைகளையும் அக்கட்சி கோட்டை விட்டுவிட்டது என்பதுதான் உண்மை.

அந்தப் பெரும் பின்னடைவுச் சூழ்நிலையில் அக்கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். மன்னார் மாவட்ட தலைமையுடன் சேர்ந்து பயணிக்க முடியாது என்று தெரிவித்து கட்சியின் நீண்ட கால பிரமுகர் பரஞ்சோதி கட்சியின் மாவட்டத் துணைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்திருந்தார்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை மாவட்டத் தொகுதிக் கிளைகளைப் புனரமைக்கும் அதிகாரம் கட்சியின் செயலாளருக்கே உரியது என்ற அடிப்படையில், இந்த மன்னார் மாவட்டக் கிளையை கடந்த வாரம் கட்சியின் செயலாளர் சுமந்திரன் உரிய கூட்டத்தைக் கூட்டிப் புனரமைத்திருக்கின்றார்.

திரு.குமார் என்பவர் கட்சியின் புதிய மாவட்டத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னைய மாவட்ட செயலாளரே பதவியில் தொடர்கின்றார். பரஞ்சோதி மீண்டும் உப தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

இரண்டு தடவைகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான சார்ள்ஸ் நிர்மலநாதன் இதுவரை கட்சியின் மாவட்டத் தலைவராக இருந்தவர். இப்போதைய புதிய மாவட்டக் கிளையில் அவர் எந்தப் பொறுப்புக்கும் தெரிவாகவில்லை.

எனினும், முடிவடைந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் எல்லா சபைகளையும் கோட்டை விட்டு விட்டோம் என்ற விடயம் மாவட்டக் கிளைக் கூட்டத்தில் பேசப்பட்ட போது, அடுத்த தேர்தலில் எங்கள் வெற்றியை நிரூபித்துக் காட்டுவோம் என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் கூட்டத்தில் சூளுரைத்துச் சென்றிருக்கிறார். ஆகவே அவர் கட்சிக்கு வெளியில் இல்லை என்று கட்சியின் மாவட்ட உறுப்பினர் ஒருவர் திருப்தி தெரிவித்தார்.

ஆக, தமிழரசின் மன்னார் மாவட்டக் கிளை சுமுகமான நிலையை நோக்கி நகர்ந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

---

## பொய்களைக் கூறி...

“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கஜு உண்பதற்காகக் கோடிக் கணக்கில் செலவிட்டுள்ளதாக இந்த அரசு குற்றஞ்சாட்டியது. ஆனால் தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதனை விட பாரிய ஒரு தொகையை செலவிட்டிருக்கின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆட்சியேறியவர்கள் இன்று, புதிய அரசமைப்பை உருவாக்குவதாக கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குப் பதிலாக அதனை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்து வருகின்றனர். அன்று மக்களிடம் கூறிய அனைத்தையும் மறந்து நிறைவேற்று அதிகாரத்தை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கு ஓரளவுக்கேனும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும் கடந்த காலங்களில் இந்தச் சிறப்புரிமைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதையும் நாம் பார்த்திருக்கின்றோம்.

எனவே, இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் போது அவற்றை அரசியல் பழிவாங்கல்களுக்காக முன்னெடுக்காமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும். ஆனால், அரசு வெறுமனே அரசியல் பழிவாங்கல் நோக்கத்தில் மாத்திரமே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அரசின் அனுமதியுடன் எவ்வித சோதனைகளும் இன்றி 323 கொள்கலன்கள் துறைமுகத்தில் இருந்து விடுக்கப்பட்டன. அவற்றில் இருந்த இரு கொள்கலன்களில் இருந்தே அண்மையில் பெருமளவான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இந்தக் கொள்கலன்களில் போதைப் பொருட்கள் இருப்பதாகச் சர்வதேச நிறுவனங்கள் எச்சரித்திருந்த நிலையிலும், அந்த எச்சரிக்கையை உதாசீனப்படுத்தி இவற்றை எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எனவே, இந்த விடயத்தில் அரச தரப்பிலும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது மிகத் தெளிவாகின்றது. எனவே, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனப் பார்த்துக் கொண்டிருக்காமல் உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.” – என்றார்.

---

## மக்களுடனான...

எனவே, அவற்றை உடைக்கும் முயற்சிகள் மூலம் இன்னும் அதிகமான பிணைப்புகளை வலுப்படுத்த முடியும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி, மக்களுடன் செலவிடும் இந்த நேரம் முழுவதும் ஒரு தலைவராகத் தான் பெறக்கூடிய மிகப் பெரிய மகிழ்ச்சியை அனுபவிப்பதாகவும் பதிவேற்றம் செய்துள்ளார்.



# நமது கருத்து

## ஆபத்தில் உயர்கல்வி?

இலங்கையின் உயர் கல்வித்துறை மிகப்பெரும் பேராபத்தில் - சரிவு வீழ்ச்சியின் ஆரம்பத்தில் - இருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரித்திருக்கின்றது.

இந்த விடயங்களை ஒட்டி கடந்த வாரம் அந்தக் கூட்டமைப்பு நடத்திய ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தின் போது இந்த விடயங்கள் பற்றிய பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

உயர் கல்வித் துறைக்கு ஏற்பட்டு வரும் சரிவு குறித்து உயர் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய மற்றும் அதிகாரிகளுக்கு எந்த ஆர்வமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வர பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இரவும் பகலும் உழைத்த போதிலும், அதிகாரத்திற்கு வந்த பின்னர் நீண்ட காலமாக எதிர்பாக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்த இந்த ஆட்சி தவறிவிட்டது என்று ஆசிரியர் கூட்டமைப்பு குறை கூறியுள்ளது.

12,000 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது ஆக 5,000 பேர் மட்டுமே பணியில் உள்ளனர் என்று அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுட்டிக் காட்டுகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டும் சுமார் 200 விரிவுரையாளர்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

கற்றறிந்தவர்கள், துறைசார் நிபுணர்கள், மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்ற மூளை வடிகால் பிரச்சினை, உயர் கல்வித் துறைப் போதனைக்கான வசதிகளில் பெரும் குறைபாடு மற்றும் சிக்கல்கள் போன்றவை காரணமாக நாட்டின் பல்கலைக்கழகங்கள் நெருக்கடியில் உள்ளன. இதனால் முழு உயர் கல்வி முறைமையும் உடனடியாகப் பெருவீழ்ச்சியின் அபாயத்தில் உள்ளது என்று கல்வியாளர்கள் ஏற்கனவே எச்சரித்து இருக்கின்றனர்.

விரிவுரை அரங்குங்கள், ஆய்வகங்கள், உணவகங்கள் போன்ற வசதிகள் இல்லாமல் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 2025 சம்பள திருத்தத்தின் கீழ் பல விரிவுரையாளர்களின் சம்பளம் குறைக்கப்பட்டு விட்டது. பல்கலைக்கழக அமைப்பு சீர்குலைந்து வருகிறது. புதிய விரிவுரையாளர்கள் பல்துறை ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் பெரும்பாலானவர்கள் நிர்வாகப் பணிகளை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் இவ்விடயம் குறித்து கருத்து வெளியிடுகையில், அரசாங்கத்தின் 'சிதைந்து போன' கொள்கைகளால் பல்கலைக்கழக அமைப்பு அடுத்த 30 முதல் 40 ஆண்டுகளுக்குள் முழுமையாக சரிந்து விடும் என்று எச்சரித்திருக்கிறார். கடந்த ஐந்து ஆண்டுகளில் பேராதனை பல்கலைகத்தில் இருந்து மாத்திரம் 100 விரிவுரையாளர்கள் பல் அறிவியல், துணை சுகாதார அறிவியல், மருத்துவம், வேளாண்மை அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவம் போன்ற பீடங்களை விட்டு வெளியேறி விட்டனர் என்று அவர் கூறுகிறார். இன்னும் சிலர் பொறியியல், கலை மற்றும் முகாமைத்துவப் பிரிவுகளை விட்டு வெளியேறி விட்டனர். இந்த நேரத்தில் சுமார் 800 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சேர்க்கப்படவில்லை. மாணவர்களுக்குப் போதிக்கும் விரிவுரையாளர்களின் பெரும் பற்றாக்குறை நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேசுவதற்கு பல தடவைகள் - நீண்ட காலமாக - முயற்சித்தும் அது சரிவரவில்லை என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.

நாட்டில் விரைந்து கவனம் செலுத்த வேண்டிய அவசர நெருக்கடி இது.

நாட்டின் ஜனாதிபதியும், உயர்கல்வி அமைச்சரான பிரதமரும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர் கூட்டமைப்போடு பேச்சு நடத்தி நாட்டின் உயர்கல்வித் துறையை சரிந்து விடாமல் பார்த்துக் கொள்வது முக்கியமாகும்.

# சொற்பொழிவாளர் மணிகண்டனுக்கு கொழும்பில் பட்டமளிப்பு கௌரவம்





கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சீரடி சாய் பாபாவின் மகிமை பற்றி சிறப்புரை ஆற்றிய தமிழ்நாட்டின் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் பி. மணிகண்டனுக்கு, சாயி நிலையத்தின் சார்பில் வழங்கப்பட்ட “சாயியின் சொல்லரசன்”– எனும் பட்டத்துக்கான சான்றிதழை, இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.குமார் இரட்ணம் கையளிக்கின்றமையையும், சாயி சமூக சேவை ஒருங்கிணைப்பாளர் ஆர். மகேஸ்வரன் தம்பதியரை, பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், திருமதி சந்திரிகா உதயநாயகன் ஆகி யோர் பாராட்டி கௌரவிப்பதையும், நிகழ்வில் பங்கேற்க சாயி அறங்காவலர் சபை செயலாளர் சிவா இராஜஜோதி, அறங்காவலர் கோபால் ஜீவரட்னம் ஆகியோரையும் படங்களில் காணலாம்.







# யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று போதைப்பொருள்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம் – குருநகர் பகுதியில் போதைப்பொருள்கள் மற்றும் ஒரு தொகைப் பணத்துடன் 51 வயதான ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர்.

எட்டு கிராம் ஹெரோயின், 16 கிராம் ஐஸ், 120 போதை மாத்திரைகள் என்பனவும் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் பணத்தொகையும் இந்த நபரிடம் இருந்து மீட்கப்பட்டன.

அந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் – வரை முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# காங்கேசன்துறையில் மீளுருவாக்கத்துடன் நேற்று உதயசூரியன் சனசமூக நிலையம் திறப்பு நிகழ்வு








1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் உதயசூரியன் சனசமூக நிலையம் மீள் உருவாக்கம் செய்யப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொதுச் சந்தை வீதியில் உள்ள உதயசூரியன் சனசமூக நிலையத்தின் நிரந்தர வளாகத்தில் புதுப்பொலிவுடன் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் திரு.க.சுகிர்தன் கலந்துகொண்டு நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யூலியன் மற்றும் உதயசூரியன் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# உலக ஆசிரியர் தினத்தில் வவுனியாவில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடு!

(கி.வசந்தன்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடு வவுனியாவில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

உலக ஆசிரியர் தினமான நேற்று "அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைகளை முறியடித்து உரிமைகளை வென்றெடுப்போம்!" எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் வவுனியா கிளையின் தலைவர் பா.நேசராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின், தலைவர் பிரியந்த பெர்ணான்டோ, வடமாகாண உபதலைவர் தீசன் திலீபன், உபதலைவி ரசிக்கா உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.




















# ஜனாதிபதி அநுர தலைமையில் உலக குடியிருப்பு தின நிகழ்வுகள்

உலக குடியிருப்பு தின நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அலரி மாளிகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றன.

"சொந்தமாக இருக்க இடம் – ஒரு அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளின் கீழ், அதன் தேசிய நிகழ்வு நடைபெற்றதோடு அதனுடன் இணைந்ததாக ஒக்டோபர் 01 – 05 வரை குடியிருப்பு வாரம் அறிவிக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிதி வசதி அற்ற சுமார் 4 ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வகையில், வீடமைப்பு அதிகார சபையால் செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், நிறைவு செய்யப்பட்ட ஆயிரம் வீடுகளை இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக ஜனாதிபதி பொதுமக்களிடம் கையளித்தார்.

UN Habitat இலங்கை அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் இந்திய அரசின் Coalition for Disaster Resilient Infrastructure (CDRI) உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் அம்பத்தலே நீர் வழங்கல் திட்டத்தின் அடையாள ரீதியான கையளிப்பு உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

பல்வேறு காரணங்களால் வீட்டுப் பத்திரங்கள் தாமதமான ஆயிரம் பயனாளிகளுக்கு காணிஉறுதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 357 பயனாளிகளுக்கு அடையாள ரீதியில் வீட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. வீடு கட்டுவதற்கு நிதி வசதி அற்ற ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 157 பேருக்கு அடையாள ரீதியாக காசோலைகள் வழங்கப்பட்டன.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்விலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

தொடர்ச்சி ▼







# ஜனாதிபதி அநுர தலைமையில் உலக குடியிருப்பு தின நிகழ்வுகள்

தொடர்ச்சி ▲

இதேவேளை, உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் கலைத் திறமைகளை மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரக் கண்காட்சி மற்றும் வீட்டுத் திட்டமிடல் தொடர்பான படைப்புகள் உள்ளடங்கிய கண்காட்சியிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, தற்போதைய அரசு நாட்டு மக்களின் வீட்டுவசதி கனவை நிறைவேற்ற ஒரு விரிவான திட்டத்தை திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றது என்று தெரிவித்தார்.

வீடு தொடர்பான எண்ணக் கருவை சமூகத்தில் கருத்தாடலுக்கு உட்படுத்துவதன் மூலம் வீட்டு திட்டமிடல் குறித்த முறையான திட்டத்தின் அவசியத்தை அரசு அடையாளம் கண்டுள்ளது என்றும், அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான, வசதியான மற்றும் மரியாதைக்குரிய வாழ்க்கைச் சூழலை வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸின் செய்தியை ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்புத் திட்டத்தின் இலங்கை திட்ட முகாமையாளர் ஹர்ஷினி ஹலங்கொட வாசித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத், மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், கொழும்பு மேயர் வ்ராய் கெலி பல்தசார், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (அரசியல்) நவ்யா சிங்லா மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிக செயலாளர் ஜி.எம். ஆர்.டி. அப்பொன்சு, நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.












# வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று

(பூ.லின்ரன்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வாண்டு ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான 88 வீடுகளில் 80 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றைய தினம் அந்தந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்றது.

அந்த வகையில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கோண்டாவில் நாகபூசணி அம்மன் கோவிலடியில் பயனாளிக்கு ஒருவருக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர், தேசிய மக்கள் சக்தியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.














# கிளிநொச்சி மாவட்டத்தில் 11 வீடுகள் பயனாளிகளிடம் நேற்றுக் கையளிப்பு

(பூ.லின்ரன்)

கிளி நொச்சி மாவட்டத்தில் வீடமைப்பு அதிகார சபையினரால் ஒவ்வொன்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான 11 வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன், வீடமைப்பு அதிகார சபையினர், கிராமசவையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் –

15 வருட காலமாக நிரந்தர வீடு இன்றி தவித்த மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் ஊடாக 3 மாத கால பகுதிக்குள் விரைவாக புதிய ஓர் அழகான வீட்டை அமைத்து கொடுக்க முடிந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு மேலதிகமாக 51 வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவையும் விரைவாக மக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, வடக்கில் உள்ள நூறு பாடசாலைகளில் அடுத்த வருட காலப்பகுதியில் ஜப்பான் உதவியுடன் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக வடக்கு மாணவர்கள் பயனடைவர் – எனத் தெரிவித்தார்.












# உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் 28 வீடுகள் கையளிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

"உங்களுக்கு வீடு – நாட்டிற்கு எதிர்காலம்" எனும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக, சொந்தக் காணி இருந்தும் வீடு கட்ட வசதியற்ற குடும்பங்களுக்கு, ரூபா ஒரு மில்லியன் நிதியுதவியின் மூலம் வீடுகள் கட்டி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி மண்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குள் உள்ள இருதயபுரம் கிழக்கு, திமிலை தீவு மற்றும் புதுநகர் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டு பூரணமாக முடிக்கப்பட்ட மூன்று வீடுகள் நேற்று சம்பிரதாயபூர்வமாக பயனாளியிடம் கையளிக்கப்பட்டன. நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 28 வீடுகள் திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வுகளிற்கு பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அதிவிருத்திக் குழுவின் தலைவருமாகிய கந்தசாமி பிரபு கலந்துகொண்டு வீடுகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்வுகளில் பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உயரதிகாரிகள், தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு இரண்டு கட்டங்களில் 97 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



















# மஸ்கெலியாவிலும் வீடு கையளிப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

2025 உலக வாழ்விட தினத்தை முன்னிட்டு "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா பிரதேசத்தில் வசிக்கும் வறிய குடும்ப ஒன்றுக்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீடு கட்டப்பட்டு வீட்டு திறப்பு விழா நேற்று நண்பகல் நடைபெற்றது.

இந்நிகவில், தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா இராஜ்குமார், பிரதேச அமைப்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர் .

இவ்வாறு நேற்றுக் கையளிக்கப்பட்ட மனை மஸ்கெலியா நகரில் உள்ள ஸ்ரீ சண்முகநாதர் ஆலய சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ளது.




# கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை குறித்து வழக்கறிஞர்கள் குழுவுடன் விஜய் ஆலோசனை



கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை குறித்து வழக்கறிஞர்கள் குழுவுடன் த.வெ.க. தலைவர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார்.

கரூரில் த.வெ.க. பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரிய த.வெ.க. மனு தள்ளுபடி செய்யப்பட்டதுடன், பொதுச் செயலாளர் ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல் குமாரின் முன்பிணை மீன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதற்கிடையில், த.வெ.க. தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜ/னா வன்முறையைத் தூண்டும் வகையில் எக்ஸ் தளத்தில் கருத்து பதிவிட்டமை தொடர்பாக, அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், த.வெ.க. வழக்கறிஞர்கள் பிரிவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விஜய் ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது, கரூர் சம்பவத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரி உச்ச நீதிமன்றத்தை நாட த.வெ.க. தரப்பு முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக சட்ட வல்லுநர்களுடனும் விஜய் தீவிர ஆலோசனை நடத்தவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்திய கூடைப்பந்து கூட்டமைப்பின் தலைவராக செயல்பட்டு வரும் ஆதவ் அர்ஜ/னா, உத்தராகண்ட் மாநிலத்தில் நடைபெறும் தேசிய சப்–ஜுனியர் கூடைப்பந்து போட்டிக்காக டேராடூன் சென்றார். அப்போது விமான நிலையத்தில் ஆதவ் அர்ஜுனாவிடம் அங்கிருந்த செய்தியாளர்கள் கரூர் விவகாரம் குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த அவர், “நாங்கள் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கிறோம். உண்மை விரைவில் வரும்” – என்றார்.

# கரூர் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று விஜய் வருத்தம் தெரிவிக்க வேண்டும்

## சீமான் அறிவுறுத்தல்

கரூர் சம்பவத்துக்கு பொறுப்பேற்று விஜய் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர் அமலி நகருக்கு நேற்று முன்தினம் சென்ற அவர், அங்கிருந்து மீனவர்களின் படகில் நடுக்கடலுக்கு சென்று பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“கடலையும், கடல் வாழ் உயிரினங்களையும் பாதுகாப்பது தொடர்பாக தூத்துக்குடியில் நவம்பர் 15 இல் ‘கடல் அம்மா மாநாடு’ நடத்துகிறோம். இந்த மாநாட்டுக்கான ஆலோசனை பயணம் தான் இது.

கரூர் சம்பவத்தின்போது த.வெ.க. தலைவர் விஜய்க்கு உரிய பாதுகாப்பு இருந்தது. ஆனால், மக்களுக்குத்தான் பாதுகாப்பில்லை. கரூர் சம்பவம் தொடர்பான நீதிமன்றத்தின் உத்தரவுகள் குறித்து கருத்து கூற முடியாது. விஜய்யை காப்பாற்ற வேண்டுமென பா.ஜ.க. நிலைப்பாடு எடுத்துள்ளது. விஜய்யை பார்க்க வந்த கூட்டத்தால்தான் நெரிசல் ஏற்பட்டுள்ளது. எனவே, நடந்த சம்பவத்துக்குப் பொறுப்பேற்று, விஜய் வருத்தம் தெரிவிக்க வேண்டும். அதை விடுத்து அரசு, பொலிஸ் மீது பழி போட்டு, தனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று கூறுவதால்தான் சிக்கல் ஏற்படுகிறது.



ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி பழி சுமத்துவது உயிரிழப்பைவிட கொடுமையாக உள்ளது. விஜய்யை கூட்டணிக்குள் கொண்டுவர பா.ஜ.க. முயற்சிக்கிறது. அதேகூட்டணியில் உள்ளதால் அ.தி.மு.கவும் விஜய்க்கு ஆதரவாக பேசுகிறது. நாம் தமிழர் கட்சி தனித்துதான் போட்டியிடும்.” என்று தெரிவித்துள்ளார்.

# கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும்: த.வெ.க. மீது பிரேமலதா கடும் விமர்சனம்

“ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும். வீரம் இருக்க வேண்டும். நம்மால் ஒரு குடும்பத்துக்கு பாதிப்பு என்றால் முதல் ஆளாக நிற்க வேண்டும். விஜய் குறித்த நேரத்தில் அங்கு வரவே இல்லை. இது அவர் செய்த முதல் தவறு.”

–இவ்வாறு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் விமர்சித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இதுகுறித்து பிரேமலதா விஜயகாந்த் உரையாற்றுகையில்,

“த.வெ.க. நிர்வாகிகள் தலைமறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். தலைக்கு கத்தியா வரப்போகிறது? தூக்கிலா போடப் போகிறார்கள்? ஒரு கட்சி என்றால் தைரியம் இருக்க வேண்டும். வீரம் இருக்க வேண்டும். நம்மால் ஒரு குடும்பத்துக்கு பாதிப்பு என்றால் முதல் ஆளாக நிற்க வேண்டும். விஜய் குறித்த



நேரத்தில் அங்கு வரவே இல்லை. இது அவர் செய்த முதல் தவறு. உங்களை பார்க்கத்தானே குழந்தைகளை வைத்துக்கொண்டு தாய்மார்கள் உட்பட அனைவரும் காலை முதல் சாலையில் நிற்கிறார்கள். அந்த பொறுப்பு வேண்டாமா?

7 மணிக்கு நிகழ்ச்சி என்றால் 7 மணிக்கு அங்கு இருக்க வேண்டும். நீங்கள் வீட்டில் இருந்தே தனி விமானத்தில்தான் வருகிறீர்கள். விஜயகாந்த் 150 படங்கள் நடித்துள்ளார். படப்பிடிப்புக்கு அவர்தான் மேக்கப் உடன் முதல் ஆளாக வந்து நிற்பார். இந்த கடமை உணர்வை தவறுவிட்டிருக்கிறார் விஜய். அவர் படப்பிடிப்புக்கு சரியாக போய்விடுவார். ஆனால் அரசியலுக்கு இப்போது தான் வந்திருக்கிறார். ஏன் அரசாங்கத்தையும், பொலிஸையும் நம்பி நீங்கள் போகிறீர்கள்? உங்களை நம்பி வந்த மக்களுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பு கொடுத்தீர்கள்? உங்களை நம்பி வரும் தொண்டர்களுக்கு தண்ணீர், உணவு கொடுக்க வேண்டாமா? இது அவர் செய்த அடுத்த தவறு. ஏதோ கூண்டுக்குள் புகுந்து கொள்வதை போல பஸ்ஸுக்குள்ளேயே இருக்கிறார். உங்கள் அண்ணன் விஜயகாந்த் செய்த விஷயங்களை கற்றுக் கொண்டு செய்யுங்கள் விஜய்.” என்று தெரிவித்தார்.



# நேபாளத்தில் மண்சரிவில் சிக்கி இதுவரை 47 பேர் உயிரிழப்பு





நேபாளத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இதுவரை 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேபாளத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வீதிகள் சேதம் அடைந்ததால், போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மீட்பு பணிகளுக்காக நேபாள இராணுவம் விமானங்கள் அனுப்பியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஏராளமானோரை இராணுவத்தினர் மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர்.

இருப்பினும், இந்த மோசமான வானிலை காரணமாக, தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் மீட்பு நடவடிக்கைகள் தடைபட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மேலும் பலர் மண்ணில் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தின் இந்த நெருக்கடி நிலை-யை கருத்திற்கொண்டு அவசர சேவைகள் மற்றும் பேரிடர் மீட்புக் குழுக்கள் தவிர்ந்த ஏனைய அனைவருக்கும் இன்று மற்றும் நாளை நாடு தழுவிய பொது விடுமுறை நாள்களாக நேபாள அரசு அறிவித்துள்ளது.






# பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக லண்டனில் பாரிய போராட்டம்

## 500 பேர் கைது

பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக பிரிட்டனின் லண்டனில் நடந்த போராட்டத்தில் சுமார் 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்புக்கு ஆதரவை தெரிவித்ததற்காக மக்கள் கைது செய்யப்பட்டனர் என லண்டன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாலஸ்தீன ஆதரவு போராட்டமான பாலஸ்தீன நடவடிக்கையின் ஏற்பாட்டாளர்கள் பிரிட்டனில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு என்று வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், ஸ்பெயினின் பார்சிலோனாவிலும் நேற்று பாலஸ்தீன ஆதரவு போராட்டம் நடைபெற்றது.

சுமார் 70,000 பேர் கூடியிருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மோதல்களில் 20 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.







# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஜனாதிபதி தமிழ் தேசிய இனத்தை மறந்தமை ஏன்..?



வானுப்பிரியா
சுபாஸ்கரசர்மா

பாலஸ்தீனம என்ற நாடு இஸ்ரேலுடன் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கிலும், கிழக்கில் ஜோர்தானுடனும், தென்மேற்கில் எகிப்துடனும் தனது எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. பாலஸ்தீனம் என்கின்ற பெயர் அவ்வப்போது அவ்விடத்திற்கு சூட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்திருந்தாலும் பாலஸ்தீனம் என்ற ஒரு நாடு பற்றிய வரலாறு 2500 வருடங்களுக்கு மேல் இலலை. அது நாடாக இல்லாது இஸ்ரேல், ஜோர்டான் ஆகியவற்றின் ஆளுகையின் இருநத பிரதேசமாகவும், பிரித்தானியாவின் ஆளுகையின் கீழ் இருந்த பிரதேசமாகவும் விளங்கியிருந்தது. பாலஸ்தீன மக்கள் அருகில் இருந்த அரபு நாடுகளினாலும் அதிகம் பாதிக்கப்பட்டும் இருந்தனர். போரால் பாலஸ்தீனம் கடும் நெருக்கடிகளை சந்தித்து இருந்தது.

ஐ.நா பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் ஓர் இறையாண்மை கொண்ட தனி நாடாக பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 81 சதவீத ஐ.நா உறுப்பு நாடுகளால் இம்முடிவு எட்டப் பட்டுள்ளது. தற்போது ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 157 நாடுகளால் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐ.நா பொதுச் சபையில் இதன்மூலம் 194 நாடுகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு ஆதரவை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா ஐ.நா பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, பாலஸ்தீன மக்களுக்கான தனி அரசுக்கான பிரிக்க முடியாத உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன மக்களின் நியாயமான பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான தேவைகளை அங்கீகரிப்பதும் அவசியம். 1967 ஆம் ஆண்டின் எல்லை வரையறையை கொண்டு, இரண்டு நாடுகள் அருகருகே இருப்பதற்கான அடிப்படையை வழங்கிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் படி ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்காக நாம் ஒன்றுபட வேண்டும் எனத் தெரிவித்தார்.



இலங்கைத் தீவைப் பொறுத்த வரை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருநது சுதந்திரம் பெற்ற நாள் முதல் தமிழ் தேசிய இனம் தமக்கு சம உரிமையை கோரி 30 வருடமாக அகிம்சை வழியில் போராடியது. அதனை தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளாதமையுடன் தமிழ் மக்கள் மீது இன வன்முறையை கட்டவிழ்தது விட்டனர். இதன் விளைவாக தமிழ் தேசிய இனத்தின் இருப்பையும், அவர்களது தேசத்தையும் பாதுகாக்க தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருந்தது. அந்த 30 வருட ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 16 வருடங்களாக நீதி கேட்டும், சமவுரிமை கேட்டும் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக போராடி வருகின்றனர்.

ஆக, தனது நாட்டிற்குள் சிங்கள தேசிய இனத்தைப் போல் இன்னொரு இனமான தமிழ் தேசிய இனமும் சுதந்திரமாக வாழ்வதற்காக 76 வருடத்திற்கு மேலாக சொல்லண்ணா, துன்ப துயரங்களுடன் போராடி வருகின்றது. அதறகாக தமிழ் தேசிய இனம் கொடுதத விலைகள் அதிகம். நாட்டில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பாலஸ்தீன மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா சொந்த நாட்டில்

தொடர்ச்சி ▼



# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஜனாதிபதி தமிழ் தேசிய இனத்தை மறந்தமை ஏன்..?

தொடர்ச்சி▲

நீதிக்காக ஏங்கும் மக்களின் போராட்டத்தையும், அவர்களது வலியையும் புரிந்து கொள்ளாமை கடந்த ஆட்சியாளர்களின் மனநிலையில்தான் தேசிய மக்கள் சக்தியும் இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

மறுபுறம் பாலஸ்தீனம் மீது கருணை காட்டும் ஐ.நா.தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், அவர்கள நீதிக் கோரிக்கைகளையும் நீதியான முறையில் அணுகி தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியுள்ளது.

மேலும் ஐ.நாவில் உலகில் எந்த நாடும் போரை விரும்பவில்லை. போர் அல்லது மோதல், அது எங்கு, எப்படி நடந்தாலும், அது ஒரு சோ-கம் என்பதை நாங்கள் அறிவோம். இப்போதும் கூட அந்த சோகத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போரின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாங்கள் நன்கு அறிவோம். போரில் இறந்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவுச் சின்னங்களுக்கு முன், அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவிகள் எழுப்பிய வேதனையான வேண்டுகோள்களைப் பார்க்கும் எவரும், போரைக் கனவு காணக்கூட மாட்டார்கள் எனவும் தெரிவித்த ஜனாதிபதி அந்ரகுமார திஸநாயக்கா காஸா பகுதியில் இடம்பெற்ற மனித பேரவலம் குறித்தும் அது துயரமான திறந்தவெளி சிறைச்சாலையாக உள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.

காஸாவைப் பொன்று முள்ளிவாய்காலில் இடம்பெற்ற பேரவலம் ஏன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா அவர்களின் கண்ணுக்கு புலப்படவில்லை? சர்வதேச ரீதியில் தம்மை நல்லவர்களாக காட்ட முயலும் அரசாங்கம் சொந்த நாட்டு மக்களின் அரசியல அபிலாசைகளை வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கும், நிலையான ஒற்றுமைக்கும் வழிவகுத்து ஒருமித்த தேசமாக எழுச்சி பெற வழிவகுக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2025




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்கஎிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும்.கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும். கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும் போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.10.2025




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன்மீக விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

# காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பணிநீக்கம்




காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பத்ம சிறி லியனகே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான நிலத்தை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் கோப் குழுவில் வெளிக்கொணரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகமாக தற்போது தினேகா ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார் என காணி மற்றும் நீர்ப்பாசன பிரதியமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

# பொலிஸ் அதிகாரிகளை கையாளும் அதிகாரத்தை பொலிஸ் மா அதிபருக்கு வழங்கும் வர்த்தமானி

இடமாற்றம் மற்றும் பதவியுயர்வு உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளை கையாளும் அதிகாரத்தை பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கும் அதிவிசேட வர்த்தமானியை அடுத்த வாரத்திற்குள் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம், பதவியுயர்வு உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளை கையாளும் அதிகாரம் தற்போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

